செ.வெ. எண்: 4 நாள்: 02.01.2012

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (2.1.2012) தலைமைச் செயலகத்தில் சென்னையில் நடைபெறவுள்ள அகில இந்திய பெண் வழக்கறிஞர்கள் கூட்டமைப்பின் தேசிய மாநாட்டு (National Conference of the All India Federation of Women Lawyers) செலவினங்களுக்காக அரசின் சார்பில் ரூபாய் 20 லட்சம் நிதி உதவிக்கான ஆணையை தமிழ்நாடு பெண் வழக்கறிஞர்கள் கூட்டமைப்பின் (Tamil Nadu Federation of Women Lawyers) தலைவர் திருமதி கே.சாந்தகுமாரி அவர்களிடம் வழங்கினார்கள்.

அகில இந்திய பெண் வழக்கறிஞர்கள் கூட்டமைப்பின் தேசிய மாநாடு இம்மாதம் 6, 7 மற்றும் 8 ஆகிய மூன்று தினங்களில் சென்னையில் நடைபெறுகிறது. இம்மாநாட்டில் இந்தியா முழுவதிலுமிருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண் வழக்கறிஞர்கள் கலந்து கொள்கிறார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம், தமிழ்நாடு பெண் வழக்கறிஞர்கள் கூட்டமைப்பின் தலைவர் திருமதி சாந்தகுமாரி அவர்கள், சென்னையில் நடைபெறவுள்ள அகில இந்திய பெண் வழக்கறிஞர்கள் கூட்டமைப்பின் தேசிய மாநாட்டில் கலந்து கொள்ளவிருக்கும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண் வழக்கறிஞர்களுக்கு தேவைப்படும் இருப்பிட வசதி, போக்குவரத்து வசதி மற்றும் உணவு வசதி ஆகியவைகளை செய்து கொடுப்பதற்கான நிதி வசதி தங்களிடம் போதுமானதாக இல்லை என்று தெரிவித்து, சென்னையில் தமிழ்நாடு பெண் வழக்கறிஞர்கள் கூட்டமைப்பின் சார்பில் நடத்தப்படும் இம்மாநாடு சிறப்பாக நடைபெறும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதி உதவி அளித்து உதவ வேண்டும் என கோரிக்கை மனு சமர்ப்பித்திருந்தார்கள்.

இக்கோரிக்கையை கனிவுடன் பரிசீலித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், சென்னையில் நடைபெறவுள்ள அகில இந்திய பெண் வழக்கறிஞர்கள் கூட்டமைப்பின் தேசிய மாநாட்டிற்கு வருகைத் தரும் பெண் வழக்கறிஞர்கள் எவ்வித சிரமமும் இல்லாமல் மாநாட்டில் கலந்து கொள்ளும் வகையில் அரசின் மானியமாக ரூபாய் 20 லட்சம் நிதி வழங்க ஆணையிட்டுள்ளார்கள்.

அந்நிதி உதவிக்கான ஆணையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தமிழ்நாடு பெண் வழக்கறிஞர்கள் கூட்டமைப்பின் தலைவர் திருமதி கே.சாந்தகுமாரி அவர்களிடம் இன்று (2.1.2012) அளித்து, அகில இந்திய பெண் வழக்கறிஞர்கள் கூட்டமைப்பின் தேசிய மாநாடு சிறக்க தனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்த ஆணையைப் பெற்றுக் கொண்ட தமிழ்நாடு பெண் வழக்கறிஞர்கள் கூட்டமைப்பின் தலைவர் மற்றும் நிருவாகிகள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு தங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9
நாள்: 2.1.2012